Original Suit No. 215/2016 நாள்: 17.06.2026

வா.சா 1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நானும், எனது சகோதரியும் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், ஆமாம். எனது சகோதரர் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால், ஆமாம். எனது சகோதரர் குடும்பத்துக்கும், எங்களுக்கும் சுமூகமான உறவுமுறை உள்ளது என்றால், ஆமாம். நானும், எனது சகோதரியும் எனது சகோதரரின் வாரிசுகளும் சேர்ந்து தாவா சொத்தை 24.01.2019ம் தேதியில் 3ம் நபருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால், ஆமாம். தாவா சொத்தில் மற்றொரு பகுதியை பொறுத்து 29.03.2021யில் ஒரு பொன்னுசாமி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால், ஆமாம். நான் தனிப்பட்ட முறையில் அதே பொன்னுசாமிக்கு ஒரு பகுதி சொத்தை 03.01.2024யில் கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால், ஆமாம். எனக்குண்டான பாகம் குறித்து எனது மகன் மகேஷ்க்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தேன் என்றால், நான் பொன்னுசாமிக்கு விற்ற சொத்தை தான் எனது மகன் கிரயம் வாங்கியுள்ளார். 04.04.2024யில் தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து பொன்னுசாமிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால், ஆமாம். தாவா சொத்துக்களை பொறுத்து நானும், எனது சகோதரியும், எனது சகோதரரின் வாரிசுகளும் சொத்தை விற்றுவிட்ட நிலையில் எனக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால், கிரயம் செய்யததது போக மீதியுள்ள சொத்தில் தான் பாகப்பிரிவினை கேட்கிறேன். மீதமுள்ள சொத்துககளை மட்டும் தாவா சொத்துக்களாக காட்டாமல் அனைத்து சொத்துக்களையும் காட்டியுள்ளேன் என்றால், சரிதான். தாவா 3, 5,11,12,13 வது அயிட்ட சொத்துக்களை எனது தகப்பனார் மற்றும் எனது சகோதரர், அவரது வாரிசுகள் அனைவரும் சேர்ந்து 16.03.2001ம் தேதியில் ஒரு ரெங்கசாமி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால், சரியல்ல. தாவாசொத்துக்களை கிரயம் பெற்ற நபர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்காததால் எனது வழக்கு நிலைக்கக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. 08.07.1996யில் எனது தகப்பனார், சகோதரர் ,அவரது வாரிசுகள் சேர்ந்து ஒரு கணபதி என்பவருக்கு சர்வே எண். 84யில் கண்ட சொத்தை கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால், சரியல்ல. அந்த கிரய ஆவணங்கள் செல்லாது

என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால், சரியல்ல. சர்வே எண். 83 யை பொறுத்து எனது தகப்பனார் சகோதரர், அவரது வாரிசுகள் சேர்ந்து 31.08.2000ம் தேதி ஒரு சுப்பிரமணி என்பவருககு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்கள் விற்பனை ஆகிவிட்ட நிலையில், அதை பொறுத்து பாகப்பிரிவினை கேட்கமுடியாது என்றால், சரியல்ல. உரிய தரப்பினர்களை சேர்க்கதாததலும், உரிய கட்சிதாரர்களை சேர்க்காததாலும் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K L PRIYANGA
Digitally signed by K L PRIYANGA

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.